**தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் – திருமதி. ஐ. ஜோதிசந்திரா, எம்,எஸ்.ஸி.,எம்.எட்.,எம்.பில்.,**

**ந.மு.எண். 1585 / அ1 / 2024 நாள் 03.10.2024**

பொருள் பள்ளிக் கல்வி – பொதுப்பணிகள் – கருணை அடிப்படை நியமனம் - பணிக்காலத்தில் காலமான சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டிகோம்பை, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, தலைமை ஆசிரியர் (லேட்) **திரு.வராஜ்குமார்** என்பாரின் வாரிசுதாரரும், மகனுமான **திரு.ரா.சங்கமேஸ்வரன், இளநிலை உதவியாளர், வட்டாரக்கல்வி அலுவலகம், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்** என்பாரின் இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக

பார்வை

1 தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 6411/அ1/2022 நாள். 13.10.2022.

2 அரசாணை(நிலை) எண் 101 பள்ளிக் கல்வித் துறை நாள் 18.05.2018

3. அரசாணை (நிலை)எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1)த் துறை நாள்.26.02.2021.

4. அரசாணை(நிலை) எண் 151 பள்ளிக் கல்வி(ப.க.1(1)த் துறை நாள் 09.09.2022

5. அரசு கடித (efile) எண்.4419/தொ.க.1 (1) 2024-1 நாள்.17.05.2024.

6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல் முறைகள் சென்னை-06, ந.க.எண். 26062/ஜே/இ2/2023 நாள். 22.05.2024

7. வட்டாரக்கல்வி அலுவலகம், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம் கடிதம் ந.க.எண். 1048/அ2/2024 நாள். 14.03.2024.

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பொம்மியம்பட்டிகோம்பை, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 12.02.2015-இல் காலமான (லேட்) **திரு.வ.ராஜ்குமார்** என்பாரின் வாரிசுதாரரும் மகனுமான **திரு. ரா.சங்கமேஸ்வரன்** என்பாருக்கு பார்வை (1) இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் **14.10.2022 முற்பகல்** முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு தற்போது **தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, வட்டாரக்கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றார்.**

பார்வை 2-இல் காணும் அரசாணை பத்தி (5-1) மற்றும் (5-2) இல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5-1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும்.

(5-2) மேலே பத்தி (5-1) இல் உள்ள அரசாணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level higher than the appointing authority), அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



CamScanner

மேலும் பார்வை 5 இல் காண் அரசு கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன அலுவலர் நிலையில் பரிசீலித்து பணிவரன்முறை செய்திடவும், விதித்தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் நியமன அலுவலரின் விரிவான குறிப்புரையுடன் கூடிய ஆவணங்களை அரசுக்கு அனுப்பிட ஏதுவாக கருத்துருவினை அனுப்பிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளநிலை உதவியாளருக்கு பார்வை 1 இன்படி தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் நியமன ஆணை வழங்கப்பட்டு **14.10.2022** முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

மேற்காண் தனியருக்கு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2, 3 மற்றும் 4-இல் காணும் அரசாணைகளின் படியும், பார்வை 6 மற்றும் பார்வை 7 இல் காண் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின் படியும், பார்வை 1 - இல் காண் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையின் கீழ் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட **தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, வட்டாரக்கல்வி அலுவலகத்தின் இளநிலை உதவியாளர் திரு. ரா.சங்கமேஸ்வரன்** என்பாருக்கு **14.10.2022** முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | இளநிலை உதவியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் திரு / திருமதி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 01 | திரு. ரா.சங்கமேஸ்வரன்<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக்கல்வி அலுவலகம்,<br>பாலக்கோடு<br>தருமபுரி மாவட்டம் | 14.10.2022<br>முற்பகல் | 14.10.2022<br>முற்பகல் |

மேற்படி **திரு. ரா.சங்கமேஸ்வரன்** பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகள் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப் டுகிறது.

இத்துடன் அன்னாரின் அசல் பணிப்பதிவேடு இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு - பணிப்பதிவேடு அசல்**

03/10/2024

முதன்மைக் கல்வி அலுவலர்
தருமபுரி

03.10.24.

பெறுநர்
**திரு. ரா. சங்கமேஸ்வரன்**
இளநிலை உதவியாளர்,
வட்டாரக்கல்வி அலுவலகம், பாலக்கோடு,
தருமபுரி மாவட்டம்.
(உரிய வழியில்)

நகல் - வட்டாரக்கல்வி அலுவலர், பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்.
நகல் - பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி), பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை 06 அவர்களுக்கு பணிந்தனுப்பி வைக்கப்படுகிறது.

CamScanner